இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் கல்வி முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

**SNPA904**– தற்போதுள்ள கல்வி முறைமையில் விசேட தேவைகள் கல்வியை முகாமை செய்தல்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 25.02.2024 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 4.30

எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

1. (அ) விளைதிறனுடைய உள்ளடங்கல் பாடசாலைகளின் பண்புகள் என்ன?

**(20** புள்ளிகள்)

(ஆ) **(i)** பாடசாலை மேம்பாட்டிற்கு பங்களிக்கும் முக்கிய காரணிகள் யாவை?

**(ii)** உங்கள் வலயத்தில் உள்ள விசேட கல்வி ஆசிரியர்களின் ஆதரவுடன் உங்கள் வலயத்தில் ஒரு மாதிரி விசேட கல்வி வள மையத்தை (Modal Special Education resource Centre) நிறுவப் போகிறீர்கள் என்று கற்பனை செய்க. வள மையத்திற்கான ஒரு தூரநோக்கு கூற்றை (Vision Statement) உருவாக்கி, தூரநோக்கு கூற்றினால் எதிர்பார்க்கப்படும் முடிவுகளை அடைவதற்கான மூலோபாய நடவடிக்கைகளுடன் (Strategic Activities) செயல் திட்டத்தைத் தயாரிக்குக.

**(40** புள்ளிகள்)

(இ) இலங்கையில் வெற்றிகரமான உள்ளடங்கல் கல்விக்கான கொள்கை முன்மொழிவில் (Policy Proposal) என்ன உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை பரீட்சிக்க.

**(40** புள்ளிகள்)

2. (அ) விசேட கல்வித் தேவைகள் கொண்ட மாணவர்களுக்கான வகுப்பு இட ஒதுக்கீடு (Class Placement Arrangements) ஏற்பாடுகளை எவ்வாறு ஏற்படுத்தலாம் என்பதை சுருக்கமாக விளக்குக.

**(20** புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கு மேலதிக கற்பித்தல் ஆதரவை வழங்குவதற்கான ஏற்பாடுகள் என்ன என்பதை பரீட்சிக்க.

**(40** புள்ளிகள்)

(இ) SEN மாணவரின் அத்தியாவசிய கற்றலின் தேர்ச்சி நிலையை (Mastery Level of Essential Learning) கணிப்பிடுவதற்கு, கணிப்பீட்டில் முழுப் பாடசாலைக் கொள்கையை எவ்வாறு உருவாக்குவீர்கள். விளக்குக.

**(40** புள்ளிகள்)

3. (அ) உள்ளடங்கல் வகுப்பறையின் முகாமைத்துவத்தில் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகத்தின் அணுகு முறைகள் அடிப்படையானவை. பங்குதாரர்களின் நேர்மறையான அணுகு முறைகளை வளர்ப்பதற்கு உள்ளடங்கல் வகுப்பறை முகாமைத்துவத்தின் நான்கு (04) முறைகளை சுருக்கமாக விளக்குக.

**(40 புள்ளிகள்)**

(ஆ) முகாமைத்துவ முறைகளை செயல்படுத்தும் போது நீங்கள் எதிர்கொள்ளக்கூடிய இரண்டு (02) பிரச்சினைகள் அல்லது சவால்களைக் குறிப்பிடவும் மற்றும் அந்த பிரச்சினைகள் மற்றும் சவால்களை சமாளிக்க ஆலோசனை வழங்குக.

**(40 புள்ளிகள்)**

(இ) இலங்கையில் விசேட கல்வியின் தற்போதைய முகாமைத்துவக் கட்டமைப்பை வரைபடத்துடன் ஆராய்க.

**(40 புள்ளிகள்)**

4. (அ) விசேட கல்வி தேவைகளைக் கொண்ட ஒரு குழந்தையைச் சேர்க்க பாடசாலை சேர்க்கை நடைமுறையில் பின்பற்றவேண்டிய வழிமுறைகளை விளக்குக.

**(20 புள்ளிகள்)**

(ஆ) நீங்கள் குறிப்பிட்டுள்ள படிநிலைகளின் படி, இலங்கையில் விசேட தேவையுடைய கல்வியறிவு பெற்ற பிள்ளைகளின் கல்வி இட ஒதுக்கீடு தொடர்பான இடைவெளிகள் என்ன என்பதை பரீட்சிக்க.

**(40 புள்ளிகள்)**

(இ) நீங்கள் கண்டறிந்த இடைவெளிகளை நிரப்ப உங்கள் பரிந்துரைகளை வழங்குக.

**(40 புள்ளிகள்)**

*-முழுப்பதிப்புரிமை பெற்றது -*